# தமிழ் இலக்கியம்

## சந்தர்ப்பம் கூறல்.

10 ஆம் 11 ஆம் ஆண்டுகளில் தமிழிலக்கியம் கற்கும் மாணவர்கள் சந்தர்ப்பம் கூறலை எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் இந்நூல் ஆக்கப் பெற்றது.

ஆக்கம்:
புலவர் இளங்கோ

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 33/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கம்பராமாயணக் காட்சிகள்:

1. "தருமம் என்று சொல்லப்படுவது ஸ்ரீராமபாணமே"

யாரால்: வாலியினால்.

யாருக்கு: ஸ்ரீராமபிரானுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: வாலி எதிர்பாராத சந்தர்ப்பத்தில் இராம பாணம் அவன் மார்பைப் பிளக்கின்றது. தன் மார்பைப் பிளந்த அம்பு ஸ்ரீராமனுடையதுதான் என்பதனை உணர்ந்த போது கூறியது.

2. "பிள்ளைகாள்! நீவிர் பெற்ற அருங்கனியை ஐவீரும் ஒருவீராய்ப் பகிர்ந்து நுகர்மின்."

யாரால்: குந்திதேவியால்.

யாருக்கு: பாண்டவர்களுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: சுயம்வரத்தில் திரௌபதியை அருச்சுனன் பெற்று மீண்டுவந்து குந்திதேவி குடியிருந்த மாளிகையை அடைந்தபோது தருமன் "தாயே, நாங்கள் ஓர் அருங்கனியைக் கொண்டுவந்துள்ளோம்" எனக் கூறினான், அவ் வேளை மறைவில் இருந்த குந்திதேவி அவ்வருங்கனியை ஐவரும் அனுபவியுங்கள் எனக் கூறினாள்.

3. "செயலிற் செயலின்மையும் செயலின்மையிற் செயலையுங் காணுகின்றவன் எவனோ, அவனே அறிஞன்; யோகி"

யாரால்: ஸ்ரீ கிருஷ்ணனால்.

யாருக்கு: அருச்சுனனுக்கு

எச்சந்தர்ப்பத்தில்: போர்க்களத்தில் அருச்சுனன் எதிரிப்படையினரைப் பார்க்கிறான். அங்கே தனது ஆசிரியர், பெரியோர் உறவினர்கள் அனைவரையும் காண்கிறான். இவர்களைக் கொல்வதற்கா ஆயுதம் எடுத்தேனெனக் கலங்கி நிற்கிறான். அவ்வேளையில் அவனது அக இருளை அகற்றி உண்மையான ஞான அறிவினைப் புகட்டும் பொருட்டு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கீதோபதேசம் செய்தபோது கூறியவை.

4. "உன் வஞ்சனைகளை இன்று நேற்று அன்று நெடுங் காலமாக அறிவேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரால்: இராமனால் (வால்மீகி இராமாயணத்தில் கூறியுள்ள படி)

யாருக்கு: கைகேயிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: கைகேயி தசரதன் முன்னிலையில் தான் முன்பு பெற்ற வரங்களைத் தெரிவித்து அவ்வரத்தின்படி இராமனைக் காட்டுக்குப் போகுமாறு ஏவியபோது.

5. "முடிசூட்டும் முகூர்த்தம் அணுகுகின்றது. அதனால் சிற்றன்னை உன்னை அழைக்கின்றாள்."

யாரால்: சுமந்திரனால்

யாருக்கு: இராமனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: தசரதன் முன் வாக்குப் பண்ணியவாறு வரத்தைக் கொடுத்து விட்டு ஆவி சோருகிறான். அவ்வேளையில் கைகேயி சுமந்திரன் மூலம் இராமனை அழைக்கின்றாள் அங்கு நிகழ்ந்தது எதுவும் அறியாத சுமந்திரன் கைகேயியின் பணிப்புக் கமைய இராமனை நோக்கிக் கூறியமை.

6. "நாயகன் உரையான் வாயால் நான் இது பகர்வன்"

யாரால்: கைகேயியால்.

யாருக்கு: இராமனுக்கு

எச்சந்தர்ப்பத்தில்: சுமந்திரனின் அழைப்புக் கிணங்க வந்த இராமனைத் தசரதனிடம் செல்லவொட்டாது, இடையில் குறுக்கிட்ட கைகேயி கூறியது.

7. "மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ?"

யாரால்: இராமனால்.

யாருக்கு: கைகேயிக்கு

எச்சந்தர்ப்பத்தில்: பரதன் முடி சூடி நாடாள வேண்டும். இராமன் பதினான்கு ஆண்டுகள் காடாள வேண்டும் என்று உன் தந்தை (தசரதன்) உனக்கு உத்தரவிட்டுள்ளார் என்று கைகேயி கூறியபோது

8. "பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ"

யாரால்: இராமனால்

யாருக்கு: கைகேயிக்கு

எச்சந்தர்ப்பத்தில்: பரதன் நாடாளவேண்டும் இராமன் 14 ஆண்டுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானகம் செல்ல வேண்டும் என்பது தசரதன் கட்டளை என்று கைகேயி உரைத்த போது அதனை மகிழ்வுடன் ஏற்று இராமன் கூறியது.

9. "ஆளை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினான் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்"

யாரால்: இராமனால்.

யாருக்கு: இராவணனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: யுத்தகளத்தில் இராவணன் இராமனின் பேராண்மையினால் தனது சேனைகள் அனைத்தையும் இழந்து தன்னந் தனியனாய் நிராயுதபாணியாய் நின்ற போது கூறியது.

10. "வருண முப்பெய ருப்பி றிந்திலர் மனனுமொன் றெனவே, தருணவாணில வெழநகைத்துரை தந்து போயினனே"

யாரால்: கன்னனால்.

யாருக்கு: தனக்குத் தானே.

எச்சந்தர்ப்பத்தில்: பாரதயுத்தத்தில் 16 ஆம் நாள் போரில் கன்னன் சேனாதிபதியாகி, யுத்தமுனையில் வருகிறான். அப்பொழுது கண்ணன், அருச்சுனன் ஆகியோர் அவன்முன் எதிர்ப்படுகின்றனர். அவ்வேளையில் சில பாணங்களை அவர்கள் மேல் எய்து இவர்களோடு வினைகெடச் சந்தர்ப்பம் இது இல்லை என்ற முறையில் போகின்ற போது கூறியது.

11. "இவன் கிழித்த ஓலை மூல ஓலையைப் பார்த்து எழுதிய படிஓலை மூலஓலையோ என்னிடத்தில் இருக்கிறது."

யாரால்: சிவபெருமானாகிய பிராமணரால் (ஆரூரர்)

யாருக்கு: சுந்தரரின் திருமணப் பந்தலிலிருந்த அவையோருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: சுந்தரரைத் தடுத்தாட் கொள்ளக் கருதிய சிவபெருமான் அவரது திருமணப் பந்தரில் கிழப்பிராமணராக வந்த சுந்தரரின் பாட்டன் எழுதிக் கொடுத்த அடிமை ஓலையினைக் காட்டி வழக்குரைத்த போது கோபம் கொண்ட சுந்தரர் அந்த ஓலையினைப் பறித்துக் கிழித்து எறிந்தார். அவ்வேளையில் அவையோரைப் பார்த்துக் கிழப்பிராமணராகிய சிவபெருமான் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. "கதியிழக்கினுங் கட்டுரை இழக்கிலேன்."

யாரால்: அரிச்சந்திரனால்.

யாருக்கு: விசுவாமித்திர முனிவருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: மயானத்தில் அரிச்சந்திரன் சந்திரமதியை வாளால் வெட்ட முற்படும் போது விசுவாமித்திரமுனிவர் குறுக்கிட்டு ஒரு பொய் கூறும்படி அரிச்சந்திரனைக் கேட்டபோது கூறியது.

13. "அரக்கரோர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர் குரங்கினத் தரசைக் கொல்ல மநுநெறி கூறிற்றுண்டோ."

யாரால்: வாலியினால்.

யாருக்கு: தனக்குள் தானே.

எச்சந்தர்ப்பத்தில்: இராமபாணத்தால் தாக்குண்டு இறக்கும் தருணத்தில்.

14. அந்த நாள் வந்திலை அருந்தமிழ்ப் புலவ."

யாரால்: குமணனால்.

யாருக்கு: பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: தனது அரச பதவியை (தன் தம்பியிடம்) இழந்து காட்டிற் கதியேதுமின்றித் தவித்த குமணனிடம் பெருந்தலைச் சாத்தனார் பரிசில் நாடி வந்தபோது கூறியது.

15. "உன்னிலும் பார்க்க உன் சிறியதாயின் மகன் தான் நிறை குணத்தவன்; நின்னிலும் நல்லன்; குறைவிலன்; அவன் அரசு புரிவது நாட்டுக்கு நலன்."

யாரால்: கோசலையினால்.

யாருக்கு: இராமனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: இராமன், நாடாளும் உரிமையைத் தம்பி பரதனுக்கு அளித்துவிட்டுக் கானகம் செல்லப் போவதாகத் தன் தாய் கோசலையிடம் சென்றுரைத்தபோது கூறியது.

16. இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ."

யாரால்: கைகேயியால்.

யாருக்கு: கூனிக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சந்தர்ப்பத்தில்: இராமன் முடிசூடி நாடாளப் போகிறான்; உன் மகன் பரதனுக்கு ஆட்சியுரிமை இல்லை. நீயும் நின் மகன் பரதனும் கோசலைக்கு அடிமையாக வாழப் போகி றீர்கள் என்று கூனி வஞ்சனை கொண்டுரைத்தபோது.

17. "இவன் பின் செல்; தம்பி என்னும் படியன்று; அடியாரின் ஏவல் செய்தி; மன்னும் நகர்க்கு இவன் வந்திடின் வா, அது அன்றேல், முன்னம் முடி"

யாரால்: சுமித்திரையால்

யாருக்கு: இலக்குமணனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: இராமனுடன் காடு செல்லக் கருதிய இலக் குமணன் தன் தாயிடம் சென்று விடை பெற்றபோது அவள் தன் மகனுக்குக் கூறியது.

## 2. நளவெண்பா - சுயம்வர காண்டம்.

1. "பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கருப்பைக் — கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கை நீர் நாடன்
பிடித்துத்தா வென்றான்......"

யாரால்: நளனால்.

யாருக்கு: தன்முன்னே நின்ற மாதர்களுக்கு

எச்சந்தர்ப்பத்தில்: நளன் சோலையினுட்புகுந்தபோது அங்குள்ள தடாகத்திலிருந்து (பொய்கையிலிருந்து) அவன் முன்னே வெளிப்பட்ட அன்னத்தைக் கண்டபோது கூறியது.

2. "...... உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும் — விஞ்சியது
காணப் பிடித்ததூ காண் ..."

யாரால்: நளனால்;

யாருக்கு: அன்னத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சந்தர்ப்பத்தில்: பசிய கூந்தலையுடைய பெண்கள் அன்னத்தைப் பிடித்து வந்து நளமகாராசனின் முன் வைத்தபோது அது அச்சம் கொண்டது. அவ்வேளையில் நளன் அன்னத்தை நோக்கிக் கூறியது.

3. "திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே யுன்ற
னிசைமுகந்த தோளுக் கிசைவாள் — வசையி
றமயந்தி யென்றோதுந் தையலாள் மென்றோ
ளமையந்தி யென்றோ ரணங்கு"

யாரால்: அன்னத்தினால்.

யாருக்கு: நளமகாராசனுக்கு

எச்சந்தர்ப்பத்தில்: நளமகாராசன் தன்னைப் பிடித்து வரச்செய்தது தன்னைக் கொல்லவோ அல்லது கூட்டில் அடைத்து வருத்தவோ அல்ல. தனது நடையையும் வஞ்சிக் கொடி போன்ற அழகிய மகளிர் தம் நடையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கென்றே என்று உணர்ந்து அச்சம் நீங்கி உரைத்தது.

4. "………… சொன்னமயி
லார் மடந்தை யென்றான்……"

யாரால்: நளனால்.

யாருக்கு: அன்னத்திற்கு.

எச்சந்தர்ப்பத்தில்: எட்டுத்திக்கிலுள்ளாரையும் தன்னுளடக்கிய வெண்கொற்றக் குடையையுடைய புகழ்பெற்ற உன் தோள்களுக்குப் பொருத்தமானவள் மென்மையாகிய தோள்களை யுடைய தெய்வப் பெண்போன்ற தமயந்தியே என்று அன்னம் கூறியபோது.

5. "எழுவடுதோள் மன்னா விலங்கிளையோர் துண்டக்
கொழு நுதியிற் சாய்ந்த குவளை யுழுநர்
மடை மிதிப்பத் தேன்பாயு மாநாடவிநீர் நாடன்
கொடை விதர்ப்பன் பெற்றதோர் கொம்பு."

யாரால்: அன்னத்தினால்.

யாருக்கு: நளனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: நளன் தமயந்தியைக் காணாமலே காதல் கொண்டு அன்னத்தை நோக்கி அவள் யார் மகள்? என வினவியபோது அன்னம் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. "நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சர்
வார்க்குஞ் சிலப்பே யணிமுரசா – வேறுபடையும்
வாழுமே கண்ணா வதன மதிக்குடைக்கீ
ழாளுமே பெண்மை யரசு."

யாரால்: அன்னத்தினால்.

யாருக்கு: நளனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: நளன் தன் உளத்தில் புகுந்து கொண்ட மயி
லனைய சாயலுடைய பெண் யார் மகள் என்று அன்னத்திடம்
வினாவியபோது தமயந்தியின் சிறப்புப்பற்றி அன்னம் கூறியது.

7. "என்று நுடங்கு மிடையென்ப வேபூலகு
நின்ற கவிகை நிழல்வேந்தே – யொன்றி
யறுகாற் சிறு பறவை யஞ்சிறகால் வீசுஞ்
சிறுகாற்றுக் காற்றாது தேய்ந்து."

யாரால்: அன்னத்தினால்.

யாருக்கு: நளனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: நளன் அன்னத்தைப் பார்த்துச் சொன்ன
மயில் யார் மடந்தை? என்று கேட்டபோது அன்னம் அவள்
விதர்ப்ப நாட்டு மன்னனது மகள் தமயந்தி என்று கூறிய
துடன் தொடர்ந்து அவள் குணநலன்களையும் அழகையும்
விபரித்துக் கூறியது.

8. "அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்னாவி
யுன்னவே சோரு முனக்கவளோ – டென்னை
யடைவென்றான் ... —"

யாரால்: நளனால்.

யாருக்கு: அன்னத்திற்கு.

எச்சந்தர்ப்பத்தில்: தமயந்தியைப்பற்றி அன்னம் உரைத்த அழ
குரைகளைச் செவிமடுத்தபின் நளன் உனக்கு அவளோடு
என்ன தொடர்பென்று அன்னத்தைக் கேட்டவேளை.

9. "பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவன்
மாமனைவாய் வாழுமயிற்குலங்கள் – காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்தே நாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரால்: அன்னத்தினால்.

யாருக்கு: நளனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: தமயந்தியிடம் அன்னத்திற்கு என்ன தொடர்பு என்று நளன் வினாவியபோது அன்னம் கூறியது.

10\. "இற்றது நெஞ்ச மெழுந்த திருங்காத
லற்றது மான - மழிந்தது நாண் மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான்...... "

யாரால்: நளனால்.

யாருக்கு: அன்னத்திற்கு.

எச்சந்தர்ப்பத்தில்: காதல் மிகுதியால் நெஞ்சத்துணர்வுகள் அழிந்திட நாணமழிந்து நின்ற நளன் அன்னத்தின் வாய்ச் சொல்லிலேதான் தன்வாழ்வு தங்கியுள்ளதாக அன்னத்திடம் கூறியது.

11\. "வீமன் திருமடந்தை மென்மாலை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்... "

யாரால்: அன்னத்தால்.

யாருக்கு: நளமகாராசனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: நளன் காதல் உணர்வு மிகுந்து எனது வாழ்வு உனது வாய்ச்சொல்லிற்றான் தங்கியுள்ளது என்று அன்னத்திடம் கூறியபோது வீமன் மகளாகிய தமயந்தி உன் தோளை அணையும்படி செய்வேன் என்று அவனுக்கு அன்னம் கூறியது.

12\. "இவ்வளவிற் சொல்லுங்கோ லிவ்வளவிற் காணுங்கோ
லிவ்வளவிற் காத லியப்புங்கோ - லிவ்வளவின்
மீளுங்கோ லென்றுரையா விம்மினான்...... "

யாரால்: நளனால்.

யாருக்கு: தன்னுள்ளத்திற்குத் தானே.

எச்சந்தர்ப்பத்தில்: அன்னப் பறவையானது, தமயந்தியை நளனது அழகிய நெடிய தோள்களில் மலர்மாலை சூட்டவைப்பேன் என்றுரைத்து வானிடைப் பறந்து சென்றதன் பின்னர் அவன் காதல் மிகுதியால் தன்னுள்ளத்தே நினைத்தது.

13\. "................................ தன்னுதலுந்
தன்னாடால் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
யென்னாடல் சொல்லென்றே ளீங்கு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரால்: தமயந்தியினால்.

யாருக்கு: அன்னத்திற்கு.

எச்சந்தர்ப்பத்தில்: நளனிடம் விடைபெற்றுச் சென்ற அன்னப் பறவையானது தமயந்தி தோழியருடன் விளையாடிக் கொண்டிருந்த போது அவளையடைந்தது. அவ்வேளை தமயந்தி அன்னப் பறவையைத் தனியிடமொன்றிற்கு அழைத்துச் சென்று என்னை நாடி வந்ததேன் என்று வினவியபோது.

14. ''செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கையர்க டம் மனத்தை வாங்குந்தடந்தோளான் - மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கா
னுளமென்பான் வேந்த னுனக்கு''

யாரால்: அன்னத்தால்.

யாருக்கு: தமயந்திக்கு

எச்சந்தர்ப்பத்தில்: தன்னை நாடிவந்ததன் காரணம் என்ன; என்று வினாவிய தமயந்திக்கு நளனின் தூதாக வந்த அன்னம் அவனது செங்கோற் சிறப்பையும் அழகையும் எடுத்துரைத்த போது

1 '' அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணு
மறங்கிடந்த திண்டோள் வலியுந் - திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வந்த ரொப்பரோ
வங்கண்மா ஞாலத் தவற்கு''

யாரால்: அன்னத்தால்.

யாருக்கு: தமயந்திக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: நளனின் சிறப்புக்களை அன்னம் தமயந்திக்கு விரித்துரைத்த போது.

16. ''வாவியுறையு மடவனமே யென்னுடைய
ஆவியுவந்தளித்தா யாதியாற் - காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி.. ...''

யாரால்: தமயந்தியால்.

யாருக்கு: அன்னத்திற்கு.

எச்சந்தர்ப்பத்தில்: நளனின் சிறப்பியல்புகளை அன்னம் எடுத்துரைத்தமையைக் கேட்டு அவன்மீது காதல் கொண்ட தமயந்தி தன் நிலையை அவனுக்குச் சென்றுரைக்குமாறு கூறிய போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ''மன்னன் புயமிரண்டும் வன்மார்பும் கச்சாகும்
எண்ண முயங்கு விப்பேன்......''

யாரால்: அன்னத்தால்.

யாருக்கு: தமயந்திக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: நளன்மீது காதல் கொண்ட தமயந்திக்கு, நள னது புயமிகள் உனது அழகிய மார்பினைத் தழுவுமாறு சேரச் செய்வேன் என்று உறுதிகூறி அன்னமானது மீண்டும் நளனி ருந்த இடத்திற்குச் செல்லுமுன் கூறியது.

18. ''மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரச
மெங்கு மறைகென் றியம்பினான்......''

யாரால்: வீமராசன்.

யாருக்கு: முரசு அறைவோனுக்கு (முரசறைபும் வள்ளுவனுக்கு)

எச்சந்தர்ப்பத்தில்: தனது மகளாகிய தமயந்தியின் நிலையினை நோக்கி அவளுக்குத் திருமணம் (சுயம்வரம்) நடத்துவதற்குத் தீர்மானித்த போது கூறியது.

19. ''அன்னக் குலத்தி னரசே அழிகின்ற
வென்னுயிரை மீள வெனக்களித்தாய் - முன்னுரைத்த
தேமொழிக்குத் தீ திலவே......''

யாரால்: நளனால்.

யாருக்கு: அன்னத்திற்கு.

எச்சந்தர்ப்பத்தில்: நளன் தமயந்தியிடம் தூதாகச் சென்று மீண்ட அன்னப் பறவையைப் பார்த்து அவள் நலமாக இருக்கின்றாளா? என்று ஆவலோடு கேட்டபோது.

20. ''கொற்றவன்ற னேவலினாற் போயக் குலக்கொடிபா
லுற்றதுவு மாங்கவ_ா னுற்றதுவு முற்று
மொழிந்ததே......''

யாரால்: அன்னத்தினால்.

யாருக்கு: நளமகாராசனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: தமயந்தியிடம் தூதாகச் சென்று திரும்பிய அன்னமானது அவள் நளன்மேல் கொண்ட காதலினால் அடையும் துன்ப நிலையினை முற்றாக எடுத்துரைத்தபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21\. "……………………………… மாவிற்
பொலிந்ததேர் பூட்டென்றான்"
யாருக்கு: தனது தேர்ச்சாரதிக்கு;
யார்: நளன்.
எச்சந்தர்ப்பத்தில்: நளனது வாயில் காப்போர் தமயந்தியின் சுயம்வரச் செய்தியை நளனுக்கு அறிவித்த பின்னர் அவன் கூறியது.

## 3. மாதரும் மலர்ப் பொய்கையும்

1\. "ஐயோ! நான் என்ன செய்வேன்? பொய்கைக்குப் போக வேண்டாம்" என்று அன்னை தடுத்தாளே! அவள் தடையை மீறி வந்தேனே! வெறுங் காதுடன் வீட்டிற்குச் சென்றால் அன்னை சீறுவாளே! திட்டிக் கொட்டுவாளே! இப்பொய்கையில் இறங்கித் தேடித் தருவார் யாரையும் காணேனே! என் கண்ணனைய தோழியரும் கைவிட்டுச் சென்றார்களே! அதோ! ஒரு மெல்லிய அன்னம் கரையருகே நீந்தி வருகின்றது. இன்னல் உற்ற என் நிலையைக் கண்டு இரக்கமுற்றுத்தான் வருகின்றது போலும்."

யாரால்: தடாகத்தில் நீராடிவிட்டுக் கரையேறிய நங்கையினால்
யாருக்கு: தனக்குத் தானே
எச்சந்தர்ப்பத்தில்: இளங்கிளி பாம்பு பாம்பு என்று அலறிய குரல் கேட்டுப் பொய்கையினின்றும் வெளியேறிய மங்கை தன் காதுத்தோடு நீரில் கழன்று விழுந்துவிட்டதை அறிந்து கவலை கொண்டு கூறியது.

1\. "அன்னப் பெடையே தொழுதேன்
அன்னை கொடியள் கண்டாய்
என்னை அடிமை வேண்டின்
நாடித்தா… …"

யாரால்: நீராடி வெளியேறிய மங்கையினால்.
யாருக்கு: (கரையருகே நீந்தி வந்த) அன்னத்திற்கு
எச்சந்தர்ப்பத்தில்: பொய்கையிலே காதணியைப் போக்கடித்த மங்கை தன்னை நாடிக் கரையருகே வந்த அன்னத்தைக் கண்டபோது கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சிரிக்கத் தெரிந்த பாரசீகர்

1. "தவறிவிட்ட ஏதோ ஒன்றைத் தாங்கள் தேடுகின்றீர்கள் போலிருக்கிறதே."

யாரால்: துடுக்குத்தனம் மிகுந்த இளைஞன் ஒருவனால்.
யாருக்கு: முதுமையாற் கூனிவிழுந்த ஒருவருக்கு.
எச்சந்தர்ப்பத்தில்: முதுமையாற் கூனிவிழுந்த ஒருவர் வீதி வழியே நடந்து சென்று கொண்டிருந்தபோது.

2. "ஆமப்பா, இழந்துவிட்ட எனது இளமையைத்தான் தேடியலைகிறேன்."

யாரால்: முதியவரால்.
யாருக்கு: துடுக்குத்தனம் மிக்க இளைஞனுக்கு
எச்சந்தர்ப்பத்தில்: வீதிவழியே சென்று கொண்டிருந்த கூன் விழுந்த கிழவரைப் பார்த்து தவறவிட்ட ஏதோ ஒன்றைத் தேடுகின்றீர்கள் போலிருக்கிறதே என்று பரிகாசம் செய்த இளைஞனுக்குப் பதிலாகக் கூறியது.

3. "பாட்டா! இந்த அழகான வில்லை, நான் எவ்வளவு பணம் கொடுத்தால் பெற்றுக் கொள்ளலாம்?"

யாரால்: இளைஞன் ஒருவனால்.
யாருக்கு: முதுகுவளைந்த முதியவர் ஒருவருக்கு.
எச்சந்தர்ப்பத்தில்: முதுகுவளைந்த முதியவர் ஒருவரைக் கண்ட போது இளைஞன் ஒருவன் ஏளனமாகக் கேட்டபோது.

4. "இதைப் பணம் கொடுத்து வாங்க வேண்டாமப்பா! இன்னும் சிறிது காலம் நீ பொறுமையோடிருந்தால் அது உனக்கு வெகுமதியாகவே கிடைக்கும்."

யாரால்: முதியவரால்.
யாருக்கு: (தன்னை ஏளனமாகக் கேட்ட) இளைஞனுக்கு.
எச்சந்தர்ப்பத்தில்: முதுகு வில்போல் வளைந்திருந்த முதியவர் ஒருவரைக் கண்ட இளைஞன் இந்த அழகான வில்லை, என்ன விலை கொடுத்து வாங்கினீர்? என்று பரிகாசமாகக் கேட்டபோது அம் முதியவர் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ''நீ ஒரு சிறுவனாக இருந்த போது எவ்வளவு அழகாயிருந்தாய். இப்போது அவ்வழகிய வதனம் மிகவும் மாறிவிட்டதே: தாடி முளைத்துக் கறுப்புப் போய் விட்டதே''

யாரால்: பாரசீகப் பெரும் புலவர் ஸஆதியால்.

யாருக்கு: (அவரது) நண்பருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: சிறுவயதில் அழகுடன் திகழ்ந்த தன் நண்பன் ஒருவனின் அழகு குன்றியிருப்பதைக் கண்டபோது கூறியது.

6. ''வேறொன்றுமில்லை: என் முகம் முன்னைய எழிலை நினைத்துக் கறுப்புடையணிந்து கவலைப்படுகிறது.''

யாரால்: இளைஞனால் (ஸஆதியின் நண்பன்)

யாருக்கு: ஸஆதிக்கு

எச்சந்தர்ப்பத்தில்: சிறுவனாக இருந்தபோது எழில் ததும்பிய உன் முகம் இப்போது தாடி முளைத்துக் கறுத்துப்போய் விட்டதே என்று புலவர் கூறிய போது அந்த இளைஞன் அதற்கு நகைச் சுவை ததும்ப அளித்த பதிலிது.

7. ''உமக்கு எந்த ஊர்?''

யாரால்: தப்ரீஸ் நகரத்தார் ஒருவரால்.

யாருக்கு: அறிஞர் ஸஆதிக்கு

எச்சந்தர்ப்பத்தில்: ஸஆதி தப்ரீஸ் நகருக்குச் சென்றிருந்த வேளையில் அவரைச் சந்தித்த ஒருவர் வினாவியபோது.

8. ''தப்ரீஸில் ஷிராஸ் வாசிகள் நாய்களை விட அதிகமாகி விட்டார்கள்''

யாரால்: தப்ரீஸ் நகர வாசி ஒருவரால்.

யாருக்கு: அறிஞர் ஸஆதிக்கு

எச்சந்தர்ப்பத்தில்: ஸஆதி தாம் ஷிராஸ் நகரைச் சேர்ந்தவரெனக் கூறியபோது.

9. ''அப்படியா செய்தி, ஆச்சரியமாயிருக்கிறதே! ஏனெனில் எங்கள் ஷிராஸில் தப்ரீஸ் வாசிகள் நாயை விடக் குறைவாகத்தானே இருக்கிறார்கள்.''

யாரால்: ஸஆதியால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கு: தப்ரீஸ் நகரவாசி ஒருவருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: தப்ரீஸில் ஷீராஸ் வாசிகள் நாய்களை விட அதிகமாகி விட்டார்கள் என்று கூறிய தப்ரீஸ் வாசிக்கு ஸஆதி கிண்டலாகப் பதில் கூறியபோது.

10. ''சென்ற ஆண்டுதான் ஒருவன், தானே தீர்க்கதரிசி என்பதாகக் கூறிக்கொ டு வந்தான் அவனை நாம் தூக்கிலிட்டுக் கொன்றோம். இப்போது நீ ஒரு......''

யாரால்: கலிபாவினால்.

யாருக்கு: ஒருவனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: தானே கடவுள் எனக் கூறிக்கொண்ட ஒரு வனை விசாரணைக்காக கலிபா முன் நிறுத்தியபோது அவர் கூறியது.

11. ''ஏ கலிபா, நீ நன்றே செய்தாய்! உன்னைப் பாராட்டு கின்றோம். ஏனெனில் அவனை நாம் தீர்க்கதரிசியாக அனுப்பியதே இல்லை.''

யாரால்: தன்னைக் கடவுள் எனக்கொண்டவனால்.

யாருக்கு: கலீபாவுக்கு

எச்சந்தர்ப்பத்தில்: சென்ற ஆண்டு தீர்க்கதரிசியெனக் கூறிக் கொண்டவர் ஒருவனைத் தாம் தூக்கிலிட்டதாகக் கலீபா கூறிய வேளையில்.

12. ''இஸ்லாத்தின் வெற்றிச சின்னமாக அது இலங் கட்டும் அதனை அழிக்க வேண்டாம்.''

யாரால்: காலித் என்பவரால்.

யாருக்கு: அப்பாஸியக் கலீபா அல்மன்ஸூர் அவர்களுக்கு

எச்சந்தர்ப்பத்தில்: ''சுவானே கிஸ்ரா'' என்னும் அரண்மனை யைத் தகர்த்து பக்தாத்தில் புதுத் தலைநகரை அமைப்பதற் குரிய பொருள்களைப் பெறுவதற்குக் கலீபா அல்மன்ஸூர் முயன்றபோது.

13. ''உம் வேண்டுகோளுக்கு நாம் இப்போது இணங்கு கின்றோம். ஏனெனில், இதிலிருந்து நமக்குக் கிடைக் கும் உபகரணங்களைவிட இதை உடைப்பதற்குச் செலவாகும் பணமே மிகுதியாகும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரால்: கலீபா அல்மன்ஸூர் அவர்களால்.

யாருக்கு: காலித்துக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: ''ஈவானே கிஸ்ரா'' அரண்மனையை பணியாட்கள் மூன்று நாட்கள் முயன்றும் உடைக்க முடியாது போன நிலையில் கலீபா காலித்தை நோக்கிக் கூறியது.

14. ''நீங்கள் அந்த அழிவு வேலையைத் தொடர வேண்டுமென்றே இப்போது நான் கூற விரும்புகிறேன். ஒருவன் ஆக்கியதை அழிப்பதற்குரிய ஆற்றல்கூட இவர்களுக்குக் கிடையாதென வருங்காலம் நம்மீது பழிசுமத்தக் கூடாது.''

யாரால்: காலித்தால்.

யாருக்கு: கலீபா அல்மன்ஸூர் அவர்களுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: ''ஈவானே கிஸ்ரா'' அரண்மனையினைத் தகர்க்க வேண்டாமெனக் காலித் முன்னர் கூறியும் அதனை ஏற்காது தகர்க்க முற்பட்ட கலீபா அது சாத்தியப்படாமை கண்டு பின்னர் காலித்தின் கோரிக்கையினை ஏற்று அதனை அழிக்காது விடுவதாகக் கூறியபோது

15. ''பைந்தொடியே; எனது கனவிலே காட்சி தருவதாகக் கூறி என்னை நீ ஏமாற்றிவிட வேண்டாம். உன்னைக் கண்டவர்களுக்குத் தூக்கமே கிடையாதென்பதை நீ அறியாயா?''

யாரால்: தலைவனால்.

யாருக்கு: தலைவிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: காதற்பித்தில் தூக்கந் துறந்து வாழும் நிலையில் கூறியது

16. ''தௌலத் குருடாகவா இருக்கும்''

யாரால்: தைமூரால்.

யாருக்கு: தௌலத்துக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: ஷீராஸ் நகரத்துக்கு அழைக்கப்பட்ட வீரர் தைமூர் இசையரங்கில் இசைபாட வந்த இசையரசர் தௌலத் குருடர் என்பதை அறிந்து (தௌலத் என்றால் செல்வம் என்னும் கருத்தினைச் சிலேடையாகக் குறிப்பிட்டு) சிரித்த வண்ணம் வினா எழுப்பியபோது கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. "தௌலத் குருடாக இல்லாமலிருந்தால் முட வனிடத்திற்கு வந்திருக்காது."

யாரால்: தௌலத்தால்.

யாருக்கு: தைமூருக்கு:

எச்சந்தர்ப்பத்தில்: "தௌலத் குருடாகவா இருக்கும் என்று இண்டலாகக் கேட்ட முடவனான தைமூருக்கு தௌலத் அஞ் சாது பதிலளிக்கும் வகையில் கூறியது.

18. "எனது புதல்வி உன் புதல்வனை மணம் செய்ய வேண்டுமாயின் இருநூறு பாழடைந்த பட்டணங் களைச் சீதனமாக வழங்க வேண்டும்."

யாரால்: ஓர் ஆந்தையினால்.

யாருக்கு: மற்றோர் ஆந்தைக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: ஆந்தைகள் இரண்டும் தம்பிள்ளைகளுக்குத் திருமணம் பேசிய வேளையில் கூறியது

19. "வாழ்க எங்கள் வேந்தன்! ஆயிரம் வேண்டுமாயினும் தருகிறேன்."

யாரால்: புதல்வியுடைய ஆந்தையினால்.

யாருக்கு: புதல்வனுடைய ஆந்தைக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: புதல்வியின் தந்தையான ஆந்தை தனது சம்பந்தி இருநூறு பாழடைந்த பட்டணங்களைச் சீதனமாகக் கேட்டபோது அதற்குப் பதிலளித்துக் கூறியது.

20. "வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குச் செல்கின்றேன்."

யாரால்: குதிரையிற் சென்ற வீரரால்.

யாருக்கு: வழியிற் சந்தித்த நண்பருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: குதிரையிற் சென்ற பாரசீகநாட்டு வீரரை வழியிற் கண்ட நபர் ஒருவர் எங்கு செல்கின்றீர் என்று கேட்டபோது அவரளித்த பதில்.

21. "வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கா? இன்று புதன்கிழமை யல்லவா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரால்: நண்பரால்.

யாருக்கு: குதிரையிற் சென்ற பாரசீக நாட்டு வீரருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: "வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கு செல்கிறேன்."
என்ற பதிலைக் கேட்டு நண்பர் வியப்படைந்தபோது.

22. இன்று என்ன கிழமை என்பது உங்களுக்குத் தெரியுமே தவிர என் குதிரையின் வேகம் உங்களுக்குத் தெரியாதல்லவா?"

யாரால்: குதிரையிற் சென்ற வீரரால்.

யாருக்கு: நண்பருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்காகப் புதன்கிழமையே செல்கின்றீரே என்று வினாவெழுப்பிய நண்பருக்குப் பதிலாகக் கூறியது.

23. "இரவில் அது புறப்பட்டால் முன் சென்ற பகலைப் பிடித்து விடும்."

யாரால்: கவிஞரால்.

யாருக்கு: கற்போருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: மன்னர் ஒருவரின் குதிரையின் வேகத்தைக் குறித்துப் பாடும்போது.

24. "ஒரு இரவிலேயே மண்ணுலகிலிருந்து விண்ணுலகுக்குப் பாய்ந்து செல்லும் வேகமுடையது என்குதிரை."

யாரால்: கவிஞர் அன்வரினால்.

யாருக்கு: கற்போருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: மன்னனிடமிருந்து தமக்குப் பரிசாகக் கிடைத்த குதிரை, கிடைத்த அன்றிரவே இறந்து விட்டமையைக் குறிப்பிடும் போது.

25. "இதன்மீது சவாரி செய்வதற்குரிய தகுதியை நான் பெறவில்லை. குறைந்தது இது என்னைவிட முப்பது ஆண்டுகளுக்கு மூத்ததாக இருக்க வேண்டும். மூதோர்கள் முதுகில் அமர்வது அவர்களை அவமதிப்பதாகும்.

யாரால்: கவிஞர் ஸல்மானால்

யாருக்கு: மன்னனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சந்தர்ப்பத்தில்: மன்னன் பரிசாகத் தமக்குத் தந்த கிழட்டுக் குதிரையை அவனிடமே திருப்பி ஒப்படைத்தபோது இவ்விடமாகக் கூறியது.

26. "இன்னும் ஓராண்டு காலம் தாங்கள் பிரதம மருத்துவராக நீடித்திருந்தால் தாங்கள் மட்டுந்தான் வாழ்ந்திருப்பீர்கள்."

யாரால்: ஒருவரால்.

யாருக்கு: பிரதம மருத்துவருக்கு

எச்சந்தர்ப்பத்தில்: பிரதம மருத்துவரை ஒருவர் சந்தித்த வேளையில் கூறியது.

27. "பைங்கிளியே! உன்பால் முகத்தைக் காண்பதற்கு யமுனையாறு பாய்ந்தோடி வருவதைப் பாராய்."

யாரால்: ஷாஜஹானால்.

யாருக்கு: மும்தாஜுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: யமுனையாற்றங் கரையில் உள்ள ஆக்ரா அரண்மனையிற் காவலனும் காரிகையும் காதற் களிப்பிலிருந்த வேளை பாய்ந்தோடும் ஆற்று நீரைப் பார்த்துத்தன் காதலிக்குக் காவலன் கூறியது.

28. "காவலரே! தங்களுக்கஞ்சி அது கற்களிலே தனது தலையை மோதிக் கொள்வதையும் பாரீர்."

யாரால்: மும்தாஜினால்.

யாருக்கு: ஷாஜகானுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: மும்தாஜின் பான்முகத்தைக் காண யமுனை நதி பாய்ந்தோடி வருவதாக ஷாஜகான் கூறியபோது தழுதழுத்த குரலில் அவன் காதலி கூறிய பதில்மொழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பெரியபுராணம் - திருநகரச் சிறப்பு.

1. "வந்ததிங் கபாயம்"

யாரால்: மனுநீதிச் சோழன் மகனால்.

யாருக்கு: தனக்குத் தானே.

எச்சந்தர்ப்பத்தில்: அழகிய பசுக்கன்றானது தனது தேர்ச்சில்லின் கீழ் அகப்பட்டு இறந்ததைக் கண்டதும் கூறியது.

2. "பெற்றமுங் கன்றும் இன்றென் உணர்வெனும் பெருமை மாளச் செற்ற என் செய்வேன்."

யாரால்: மனுநீதிச் சோழன் மகனால்.

யாருக்கு: தனக்குத் தானே.

எச்சந்தர்ப்பத்தில்: பசுவின் அழகிய தலையீற்றுக் கன்றானது தனது தேர்க்காலின் மீது சிக்குண்டு இறந்ததைக் கண்டு உள்ளம் பதைத்துக் கூறியது.

3. "மலர் தலை உலகங்காக்கும் மனுவெனும் எங் கோமானுக் குலகிலிப் பழிவந் தெய்தப் பிறந்தவா றொருவன்".

யாரால்: மனுநீதிச் சோழன் மகனால்.

யாருக்கு: தனக்குத்தானே.

எச்சந்தர்ப்பத்தில்: தனது தேர்க்காலின் கீழ் நெரிபட்டு இறந்த கன்றின் தாய்ப்பசு அடைந்த வேதனையைப் பார்த்து உள்ளம் பதைப்புற்று மனுநெறி தவறாத மனுநீதிச் சோழனுக்குப் பழியுண்டாக மகனாகப் பிறந்தேனே எனத் தன்னையே நொந்து கூறியது.

4. "வந்தஇப் பழியை மாற்றும் வகையினை மறை நால் வாய்மை அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவ தறமேஆகில் எந்தையீ தறியா முன்னம் இயற்றுவன் ......"

யாரால்: மனுநீதிச் சோழன் மகனால்.

யாருக்கு: தனக்குத் தானே.

எச்சந்தர்ப்பத்தில்: பசுக்கன்றின் கொலையால் தனக்கு ஏற்பட்ட பழியை மாற்றும் வகையில் — பிராயச்சித்தமாக வேத உண்மைகளை நன்குணர்ந்த அந்தணர்கள் விதித்த விதிகளின்படி தன் தந்தை இந்நிகழ்வினை அறிவதன் முன்னரே ஆற்றுதற்குக் கருதிய வேளையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. "ஈன்றிடோர் பசுவந் தெய்தி, இறைவ நின்கொற்றவாயில் தூங்கிய மணியைக் கோட்டால் துளக்கிய......"

யாரால்: வாயிற் காவலரால்.

எச்சந்தர்ப்பத்தில்: திடீரென எழுந்த ஆராய்ச்சி மணியின் ஓசையைக் கேட்டு அரியணையினின்றும் இறங்கி வந்த அரசன் அம்மணி யோசை எழுந்ததற்கான காரணத்தை அறியும்பொருட்டு அரண் மனை வாயிலை அடைந்த போது.

6. "என்னிதற் குற்ற......"

யாரால்: மனுநீதிச் சோழனால்

யாருக்கு: அமைச்சருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: அரண்மனை வாயிலில் தூங்கிய ஆராய்ச்சி மணி யைக் கன்றையிழந்த பசு அடித்ததென வாயிற்காவலர் மன்ன னுக்குக் கூறியபோது.

7. "வளவநின் புதல்வன் ஆங்கோர் மணிநெடுந் தேர்மேல்ஏறி அளவில் தேர்த் தானை சூழ அரசுலாந் தெருவிற் போங்கால் இளையஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந் திறந்ததாகத் தளர்வுறும் இத்தாய்வந்து விளைத்ததித் தன்மை என்றான்"

யாரால்: முதிர்ந்த அறிவுடை அமைச்சனால்.

யாருக்கு: அரசனுக்கு

எச்சந்தர்ப்பத்தில்: ஆராய்ச்சி மணியைத் தனது கொம்பினால் அடித்த பசுவுக்கு என்ன நிகழ்ந்தது என்று மனுநீதிச் சோழன் அமைச்சர் களை வினாவிய போது அதற்கு விடையாக அவர்கள் கூறியது

8. "வெவ்விடந் தலைக் கொண்டாற்போல் வேதனை அகத்துமிக் கிங் கிவ்வினை விளைந்த வா றென்றிடருறும் இரங்கும் ஏங்கும் "செவ்விதென் செங்கோல்" என்னும்"

யாரால்: மனுநீதிச் சோழனால்.

யாருக்கு: தன்மனத்துக்குத் தானே.

எச்சந்தர்ப்பத்தில்: அமைச்சன் மன்னன் மகன் (வீதிவிடங்கன்) தேர் மீதமர்ந்து வீதியுலாவரும் போது தேர்க்காலின் கீழ்ப் பசுக்கன்று அகப்பட்டு நெரிக்கப்பட்டு இறந்தது என்ற செய்தியைக் கூறிய போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ''மன்னுயிபுரந்து வையம் பொதுக்கடிந் தறத்தில் நீடும் என்னெறி நன்றால்'' ''என்னும் எண்செய்தாலதீரும்'' என்னும்"

யாரால்: மனுநீதிச் சோழனால்.

யாருக்கு: அமைச்சருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: கன்றை இழந்த தாய்ப்பசுவின் துயர்கண்டு பெருந்துயர் கொண்ட மன்னன் தனது செங்கோலாட்சியைப் பழிப்பது போன்று கூறியது.

10. ''சிந்தை தளர்ந்தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால் கொந்தலர்தார் மைந்தனை முன் கோவதைசெய் தார்க்குமறை அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்''

யாரால்: அமைச்சர்களால்.

யாருக்கு: மனுநீதிச் சோழனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: கன்றையிழந்து துயருறும் பசுவுற்ற துயரனைத்தையும் கானுற்ற மன்னன் இதற்கு என்ன செய்யலாம் என்று ஏங்கி நின்ற வேளையில் அமைச்சர்கள் வேதநூல் உணர்ந்த அந்தணர்கள் கூறும், பிராயச்சித்தச் செயலில் மைந்தனை ஈடுபடுத்தலே சிறந்த தீர்வாகும் என்றுரைத்தனர்.

11. ''வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக் குழக்கன்றை இழந்தலறுங் கோவுறு நோய் மருந்தாமோ இழக்கின்றேன் மைந்தனை என்றெனவீரும் சொல்லிய இச் சழக்கின்று நானிசைந்தால் தருமந்தான் சலியாதோ''

யாரால்: மனுநீதிச் சோழனால்.

யாருக்கு: அமைச்சர்களுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: மறையை ஓதும் அந்தணர் விதித்தவழி மைந்தனை நிறுத்துவதே இதற்குத் தீர்வாகும் என அமைச்சர்கள் கூறிய போது அவர்களை நோக்கி அரசர் கூறியது.

12. ''மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத் தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால் ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால் ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரால்: மனுநீதி மன்னனால்.

யாருக்கு: அமைச்சர்களுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: பசுவதை செய்தமைக்குப் பிராயச்சித்தமாக வேத நூலோதும் அந்தணர்கள் கூறும் வழி ஒழுகலே தக்கதென அமைச்சர்கள் கூறியவற்றை மறுத்து மன்னன் கூறியபோது

13. "தொன்மனு நூல் தொடைமனுவால் துடைப்புண்டதெனும் வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர்—"

யாரால்: மனுநீதி மன்னனால்.

யாருக்கு: அமைச்சர்களுக்கு

எச்சந்தர்ப்பத்தில்: பசுவதைக்குப் பிராயச்சித்தமாக அமைச்சர்கள் கூறிய வழிகள் ஏற்புடையதல்லவென்று மன்னன் எடுத்துரைத்த போது.

14. "நின்றநெறி உலகின்கண் இதுபோலும் முன் நிகழ்ந்ததால்
பொன்று வித்தல் மரபன்று மறைமொழிந்த அறம்புரிதல்
தொன்றுதொடு நெறியன்றோ... "

யாரால்: அமைச்சர்களால்.

யாருக்கு: மனுநீதிச் சோழனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: பசுவதைப்பழிக்குப் பிராயச்சித்தமாக வேதத்தில் விதித்தவாறு ஒழுகுதலே சிறந்ததென்றும் இது தொன்று தொட்டு வழக்கத்தில் இருந்து வரும் நெறியென்றும் மன்னனுக்கு அமைச்சர்கள் சுட்டிக்காட்டிய போது.

15. "இவ்வண்ணம் பழுதுரைத்தீர்"

யாரால்: மனுநீதிச் சோழனால்.

யாருக்கு: அமைச்சர்களுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: பசுவதைப்பழிக்குப் பிராயச்சித்தம் முன்னரும் வேதநூல் விதிப்படி பல நிகழ்ந்துள்ளன என்று மன்னருக்கு எடுத்துரைத்த அமைச்சர்களைச் சினந்து மன்னன் கூறியது.

16 "அவ்வுரையில் வருநெறிகள் அவை நிற்க அறநெறியின்
செவ்வியஉண் மைதறிநீர் சிந்தை செயாதுரைக்கின்றீர்
எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித் தாமிடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்துவிழுந் ததுவிளப்பீர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரால்: மனுநீதிச் சோழனால்.

யாருக்கு: அமைச்சர்களுக்கு

எச்சந்தர்ப்பத்தில்: தனது அமைச்சர்கள் கூறிய பிராயச்சித்த ஆலோசனைகளை மறந்து இத்தகைய சம்பவம் உலகில் முன்னர் எங்கேனும் நிகழ்ந்ததா? என்று அவர்களை மன்னன் வினாவும் வகையில் கூறியது.

17. "போற்றிசைத்துப்புரந்தரன்மால் அயன்முதலோர் புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடை உயிர்கொன்றான் ஆதலினால் துணிபொருள் தான்
ஆற்றவுமற் றவற்கொல்லும் அதுவேயாம் எனநினை மின்"

யாரால்: மனுநீதி மன்னனால்.

யாருக்கு: தனது அமைச்சர்களுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கும் இத்திருவாரூரில் என் மகன் (வீதிவிடங்கன்) செய்த பசுக் கொலைக்குத் தண்டனையாக அவனைக் கொல்வதே நீதியாகும் என்று மன்னர் நீதி வழங்கிய போது.

## 6. கர்ணனும் கும்பகர்ணனும்

1. "ஐயனே! யானே உன்னை ஈன்ற தாய், கதிரவன் அருளால் என்பால் நீ பிறந்தாய்; பழியஞ்சி உன்னைப் பேழையில் விடுத்தேன்."

யாரால்: குந்திதேவியால்.

யாருக்கு: கர்ணனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: கண்ணனின் ஏவலின்படி கர்ணனைப் பாண்டவர் பக்கம் வரும்படி அழைப்பதற்காக வந்த குந்திதேவி கர்ணனைத் தன் மகனெனக் கூறியபோது.

"ஐயனே! உன்னை அருமையாக வளர்த்தெடுக்க நல்வினை செய்திலேன்."

யாரால்: குந்திதேவியால்.

யாருக்கு: கர்ணனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: கர்ணனின் தாய் தானே என்பதை உறுதி படுத்திய பின்னர் அவனை அணைத்துப் பொன்முடி மோந்து கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. "வருக என் மதலாய் இளைஞர் ஐவரும்
நின் மலரடி அன்பினால் வணங்கும்
உரிமையால் மனமொத்து ஏவலேபுரிய
ஒருதனிச் செய்யகோ லோச்சி
அரசெலாம் வந்துன் கடைத்தலை வணங்க
ஆண்மையும் செல்வமும் விளங்கக்
குருகுலா திபர்க்கும் குருசிலாய் வாழ்வு
கூர்வதே கடனெனக் குறித்தாள்"

யாரால்: குந்திதேவியால்.

யாருக்கு: கர்ணனுக்கு.

எச்சந்தர்ப்பமீதில்: குந்திதேவியின் மகனே கர்ணன் என்பதை அவன் அறிந்த பின்னர். பாண்டவர் பக்கம் வரும்படி அவன் அன்னை குந்திதேவி அழைத்த போது.

4. திடம் படுத்திடுவேல் இராசராசனுக்குச் சென்று செஞ் சோற்றுக் கடன்கழிப் பதுவே எனக்கு இனிப் புகழும் கருமமும் தருமமும் என்றான்."

யாரால்: கர்ணனால்.

யாருக்கு: குந்திதேவிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: பாண்டவர் பக்கம் வரும்படி தன் தாயான குந்திதேவி கேட்டபோது இதற்கு இசைய மறுத்துக் கர்ணன் கூறியது.

5. "எனக்கு நன்றி செய்த துரியோதன மன்னனுக்காக அமர்க்களத்திற் சென்று போர்புரிவதே அறமும் புகழும் ஆகும். அவன் உணவை யுண்டு வளர்ந்த யான், செஞ் சோற்றுக் கடன் கழியாது என் தம்பியருடன் சேரேன்.

யாரால்: கர்ணனால்.

யாருக்கு: குந்திதேவிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: பாண்டவர் பக்கம் வரும்படி கர்ணனை அன்னையான குந்திதேவி கேட்டபோது.

6. "ஐயனே! எனக்கு இன்னருள் சுரந்த இராமவீரன் உனக் கும் அபயமளிப்பான். மாயப்பிறவிநோய்க்கும் மருந்தாக

அறைவான். எனக்கு அவன் தந்த இலங்கையரசும் செல்வமும் உனக்கு யான் தருவேன்; ஆதலால் தீவினை புரியும் தமையனைத் துறந்து அற நெறியாய இராமனைச் சேர்தலே அறிவுடைய உனக்கு அழகாகும்.

யாரால்: விபீடணனால்.

யாருக்கு: கும்பகர்ணனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: கும்பகர்ணனின் வீரத்தையும் திறமையையும் அறிந்த இராமபிரான் தூவனைத் தன்பக்கம் சேர்த்துக் கொள்ள விரும்பி விபீடணனை அவனிடம் அனுப்பி இராமன் பக்கம் சேரும்படி அழைத்தபோது.

7. "ஐய, நீர்திருமிழிபோல் நிலையற்றதாகிய இவ்வுலக வாழ்வை விரும்பி இராவணன் எனக்குச் செய்த பெரு நன்றியை மறப்பேனா? நெடுநாளாக என்னை வளர்த்துப் போர்க்கோலம் செய்து இங்கனுப்பிய இலங்கை நாதனுக்கு உயிர் கொடாது பகைவர்பக்கம்போவேனா? இலங்கையின் பெருநிதியை விரும்பி என் தமையனது உயிரை வாங்கும் பகைவனைப் பணிந்து இரந்து பதவி பெற்றிருத்தல் எனக்கு ஏற்ற தன்று நீ சொல்லிய நீதி முறையனைத்தும் உனக்குத் தக்கதே"

யாரால்: கும்பகர்ணனால்.

யாருக்கு: விபீடணனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: இராமனின் பக்கம் வரும்படி தன்னை அழைத்த விபீடணனுக்குக் கும்பகர்ணன் பதிலளித்த போது

## 7. சீறாப்புராணம்-நபி அவதாரப் படலம்.

1. "திருத்தும் பொன்னக ரமரரே திரண்ட வானவரே கருத்தி வண்மகிழ்ந் தெவ்வையு மலங்கரித் திடுமின் வருத்த மொன்றிலா முகம்மதை யாமினா வயிற்றில் இருத்தி னேன்."

யாரால், இறையோனாகிய அல்லாஹ்வினால்.

யாருக்கு: வானவருக்கு (தேவர்களுக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சந்தர்ப்பத்தில்: அப்துல்லாவின் நெற்றியினின்றும் முகம்மது நபி (ஸல்) அவர்கள் ஆமினாவின் வயிற்றில் கருத்தரித்த வேளையில்.

2. "கரைவ னேங்குவன் மலங்குவன் கலங்குவன் கதறி
இரைவன் கன்னத்திற் கைகளைவைத் திருந் தெழுந் திநப்பன்
தரையின் மேல்விழுந் தெனக்கிலை யினிச்சிங்கா சனமென்று"
யாரால்: இபிலீசுவினால்.
யாருக்கு: தனக்குத்தானே.
எச்சந்தர்ப்பத்தில்: ஆமினா வயிற்றில் முகம்மது நபி அவர்கள் கருத்தரித்த செய்தி அறிந்த இபுலீசு கலக்கம் கொண்டபோது.

3. "தரித்திடு முதற் றிங்களிற் றரைபுக ழாதாம்
உரைப்ப ராமினா கனவினி லுன்றிரு வுதரத்
திருக்குஞ் சந்ததி வலிமையை யுடையதிவ் வுலகத்
தருக்க னொப்பல நாமமு சம்மதென் றகன்றார்."
யாரால்: ஆதாமினால் (ஆதம்நபி).
யாருக்கு: ஆமினாவுக்கு.
எச்சந்தர்ப்பத்தில்: ஆமினா கருவுற்ற முதல் மாதத்தில் ஆதம் நபி அவள் கனவில் தோன்றிக் கூறியது.

4. "ஒக்கல் கூட்டுறப் புறநகர்க் கெழுகவென் றுரைத்தார்."
யாரால்: அப்துல் முத்தலிபுவினால் (முகம்மதுநபியின் பாட்டனார்).
யாருக்கு: அப்துல்லாவுக்கு.
எச்சந்தர்ப்பத்தில்: வர்த்தகம் தொடர்பான பணிகளைக் கூறிப் புற நகருக்குச் செல்லுமாறு அப்துல்லாவுக்குப் புத்திமதி கூறிய போது.

5. "கத்துகங் கொணர் கென்று கட்டுரைத்தனர் கடிதின்."
யாரால்: அப்துல்லாவினால்.
யாருக்கு: ஏவலாளர்களுக்கு.
எச்சந்தர்ப்பத்தில்: தனது தந்தையான அப்துல் முத்தலியின் பணிப்பின் பேரில் புறநகர்க்குப் புறப்படும் வேளையில்.

6. "பதியை நாடிவந்தவ ராமினாக் கிவை யெலா
நவின்றார்."
யாரால்: அப்துல்லாவுடன் கூடிச் சென்ற பரிவாரத்தினரால்.
யாருக்கு: ஆமினாவுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சந்தர்ப்பத்தில்: அபுவாவில் அப்துல்லாவை அடக்கம் செய்து விட்டு மக்மோ நகரை வந்தடைந்தவர்கள் ஆமினாவின் இல்லம் சென்று நடந்தவற்றை எடுத்துரைத்த போது.

7. ''தொடுத்த துன்பங்களை நற்றிநல் வழிபல சொன்னார்.
யாரால்: அப்துல் முத்தலிபுவினால்.
யாருக்கு: ஆமினாவுக்கு.
எச்சந்தர்ப்பத்தில்: அப்துல்லாவின் மறைவு கேட்டு ஆமினா ஆற்றொணாத் துயருற்ற போது

## 8. நீதிக்குப் பின் பாசம்.

1. ''எங்களை ஈங்கு அழைத்தவர் யார்?''
யாரால்: மாமன்னர். ஜஹாங்கிரால்.
யாருக்கு: (உயிரற்ற உடலைச் சுமந்து நின்ற) குடிமக்களுக்கு.
எச்சந்தர்ப்பத்தில்: நூர்ஜஹானது துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவன் இரையான செய்தியை அறிவிக்கும் பொருட்டு அரண்மனை வாயில் மணியை அடித்ததால் அம்மணி ஓசை கேட்டு மாமன்னர் அரச மண்டபத்துக்கு மேனாக உள்ள நுழைமாடத்துக்கு வந்தபோது எழுப்பிய வினா?

2. ''மாட்சிமைமிக்க மன்னரே! ஒருவன் கொலை செய்யப் பட்டிருக்கிறான். நியாயம் நீதி முறையைக் கோரி நாம் இங்கே வந்துள்ளோம்.''
யாரால்: (உயிரற்ற உடலைச் சுமந்து நின்ற குடிமக்களில்) வயது முதிர்ந்த ஒருவரால்.
யாருக்கு: மாமன்னர் ஜஹாங்கீருக்கு.
எச்சந்தர்ப்பத்தில்: எங்களை ஈங்கு அழைத்தவர் யாரென மன்னர் வினாவிய போது.

3. ''உங்களுக்கு நீதி கிடைக்கும்: என்ன நடந்தது? விஷயத்தைச் சொல்லுங்கள்.''
யாரால்: மன்னர் ஜஹாங்கீரால்.
யாருக்கு: வயது முதிர்ந்தவருக்கும் கூடிநின்ற குடிமக்களுக்கும்.
எச்சந்தர்ப்பத்தில்: கொலையுண்டவருக்காக நீதி கோரிக் குடிமக்கள் குரலெழுப்பிய போது மக்களை அமைதிப்படுத்த மன்னர் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ''மாமன்னரே! அரசியேதான், இங்கு குழுமியிருக்கும் அத்தனை பேரும் சாட்சி கூறுவர்.''

யாரால்: வயது முதிர்ந்த குடிமகனால்.

யாருக்கு: மன்னர் ஜஹாங்கீருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: அரசி கொலை செய்திருக்க மாட்டாள் என்று மன்னர் மறுத்துரைத்த போது.

5. ''நீங்கள் அனைவரும் அரசிக்கு எதிரான சாட்சியங்களே. அப்படித்தானே? எல்லாம் புதிராகத்தான் இருக்கிறது. இருந்தாலும் நீதிவழங்க நான் தயங்க மாட்டேன்.''

யாரால்: மாமன்னர் ஜஹாங்கீரால்.

யாருக்கு: கொலைபற்றி முறையிட்ட குடிமக்களுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: அரசியே கொலைகாரியென்பதை நம்பாத மன்னர் மக்கள் மன்றத்தில் கூடியிருந்தோரை உசாவும் தோரணையில் பார்த்தபோது அவர்கள் சிரம் தாழ்த்தி தங்கள் முறையீட்டை உறுதிப்படுத்திய போது மன்னர் கூறியது.

6. ''அரசாங்க அமைச்சர்களே! அரசியைக் கைது செய்ய உத்தரவிடுங்கள். நாளை அரசி நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படவேண்டும். எல்லா விதத்திலும் அரசியைக் கைதியாகவே கவனிக்கத் தயங்க வேண்டாம் என்பதைக் கருத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.''

யாரால்: மன்னர் ஜஹாங்கீரால்.

யாருக்கு: தன் அமைச்சர்களுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: அரசியே கொலை செய்தாள் என்று குடிமக்களும் மக்கள் மன்றத்தினரும் சிரம் தாழ்த்தித் தெரிவித்ததைத் தொடர்ந்து அரசியைக் கைது செய்யுமாறு மன்னர் கட்டளை பிறப்பித்த போது.

7. ''மாட்சிமை மிக்க மாமன்னரே! ''செய்குல் இஸ்லாம்'' என்ற முறையில் இவ் விஷயத்தில் தலையிடத் தங்கள் அனுமதியைக் கோருகின்றேன். இத்தகைய சந்தர்ப்பங்களில் மாற்றுத் திட்டம் ஒன்றையும் இஸ்லாம் விதித்திருக்கிறது. மாமன்னரே. கொலை செய்யப்பட்டவரின் வழித்தோன்றல்கள், கொலையுண்டவரின் உறவினருக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்படும் உயிரீட்டுக் கூலியைப் பெறவிரும்பின் அவ்வாறு செய்து குற்றம் செய்தவரின் குற்றத்தை நீக்கிக் கொள்ளலாம்.''

யாரால்: முதியவர் ஒருவரால்

யாருக்கு: மாமன்னர் ஜஹாங்கீருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: நூர்ஜஹான் கொலைக் குற்றத்தை ஒப்புக் கொள்ள அரசனால் அவளுக்கு மரணதண்டனை விதிக்கப் பட்டபின் மக்கள் மன்றத்தில் நிலவிய பேரமைதியின் மத்தியில் முதியவர் ஒருவரினால் கூறப்பட்டது.

2 ''மாட்சிமை தங்கிய மாமன்னரே! இறந்தவரின் வழித் தோன்றல்கள் சார்பில் நான் ஒன்று கூறவிரும்பு கிறேன். இங்கே, இப்பொழுது தங்களின் நீதிவழுவா நெறிமுறையினைக் காணும் பாக்கியத்தைப் பெற்ற நாம் அளவில்லா மகிழ்ச்சியடைந்தோம். எனவே இறந்தவரின் உறவினருக்கும் கொடுக்கப்படும் உயிரீட்டுக் கூலியைப் பெறுவதில் திருப்தி அடைகிறோம். தாங்கள் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல அல்லாஹ்வை வேண்டுகின்றோம்.''

யாரால்: கொலையுண்டவரின் உறவினர் ஒருவரால்.

யாருக்கு: மாமன்னர் ஜஹாங்கீருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: கொலையுண்டவரின் உறவினர் ஒருவர் இறந்தவரின் உயிரீட்டுத் தொகையைப் பெற விரும்பின் அதனையீந்து கொலைக்குற்றத்தை நீக்கிக் கொள்ளலாமென இஸ்லாம் விதித்த மாற்றுத்திட்டத்தை வழக்கு மன்றத்தில் இருந்த முதியவர் ஒருவர் கூறியதன் பின்னர் கூறப்பட்டது.

## 9. கங்கையில் விடுத்த ஓலை

1. ''சிந்திக்கின் மானிடர் தம் வாழ்க்கையிது வென்றேன்,''

யாரால்: விபுலானந்த அடிகளால்.

யாருக்கு: தனக்குத்தானே.

எச்சந்தர்ப்பத்தில்: நீரலையால் இழுப்புண்ட குச்சியொன்று நீரில் மேலும் கீழும் விழுந்தும் அலைந்தும் பின் கரையொதுங்கியும் கிடக்கும் செயல் கண்டு மனித வாழ்க்கையின் இயல்பு இதுவெனக் கூறியது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. "தாழ்வதும் மடிவதுவுந் தரணியில் வந்துதித்தோர்
தாவில் புகழ் நலம்பெருக்கிந் தண்ணளிசேர்ந் தனராய்
வாழ்வதுவு மெத்திறத்தால் வந்தனகாண் என்றேன்."

யாரால்: விபுலாநந்த அடிகளால்.

யாருக்கு: வான் மதிக்கு (சந்திரனுக்கு)

எச்சந்தர்ப்பத்தில்: சந்திரனோடு கற்பனையில் உரையாடு கையில் மனித வாழ்வின் இயல்பு குறித்த தனது சந்தேகத்தை வான் மதியிடம் கேட்டறிய முற்பட்ட போது.

3. "மாய்தலெனும் பேருண்மை பிறந்தலெனு முண்மை
வந்துதித்தோர் தொல்லுலகில் வளர்தலெனு முண்மை
தேய்தலெனு முண்மையிவை யாருமுளங் கொள்ளச்
சென்றுதேய்ந் திறந்துதித்து நின்றுவளர்கின்றேன்,"

யாரால்: சந்திரனால்.

யாருக்கு: விபுலாநந்த அடிகளுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: பிறப்பு இறப்புப் பற்றியும் மண்ணுலகில் பிறந்தோர் வாழ்வு பற்றயும் அடிகளார் எழுப்பிய வினா வுக்குச் சந்திரன் பதிலளிக்கும் வகையில் கற்பனையில் கூறப் பட்டது.

4. "இன்றுயில்போற் சாக்காடும் இனிதுயின் றதன்பின்
எழுவதுபோற் பிறப்புமெனு மியற்புலவ னுரையை
நன்றுணர்தி ......"

யாரால்: சந்திரனால்.

யாருக்கு: விபுலாநந்த அடிகளாருக்கு

எச்சந்தர்ப்பத்தில்: வாழ்வின் இயல்புபற்றி அடிகளார் சந்திர தேவனிடம் வினாவியபோது சந்திரன் "உறங்குவது போலுஞ் சாக்காடு, உறங்கிப் பின் விழிப்பது போலும் பிறப்பு" என்ற திருவள்ளுவர் கூற்றை மேற்கோள் காட்டிப் பதிலளித்த போது.

5. "நரகமொடு சுவர்க்கமுந்தான் நண்ணுவதேன் என்றேன்."

யாரால்: விபுலாநந்த அடிகளாரால்.

யாருக்கு: சந்திரனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: இறப்பு நித்திரை போன்றதென்றும் பிறப்பு நித்திரையின் பின் விழிப்பது போன்றதென்றும் திருவள்ளுவர் கூறிய கருத்தினைச் சுட்டிக்காட்டிய சந்திரனை நோக்கி அடிகளார் கேட்ட வினா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. "நற்கனவு சுவர்க்கமுளம் நலிய வருங் கனவு நரகமிவை நல்வினையின் தீவினையின் விளைவாய் உற்ற வறிதி....."

யாரால்: சந்திரனால்.

யாருக்கு: விபுலானந்த அடிகளாருக்கு

எச்சந்தர்ப்பத்தில்: இறப்பு, பிறப்புப்பற்றிய உண்மையைச் சந்திரனிடம் கேட்டுணர்ந்த அடிகளார் சுவர்க்கமும் நரகமும் நண்ணுவது ஏன் என்று மீண்டும் வினவியபோது சந்திரன் அளித்த பதிலிது.

7. "வருந்தித்தாங் கற்றகல்வி மாய்ந்து மறைந்திடுமோ மறுமையிலு முதவுமோ....."

யாரால்: விபுலானந்த அடிகளால்.

யாருக்கு: சந்திரனுக்கு

எச்சந்தர்ப்பத்தில்: உயிர்கள் செய்யும் நல்வினை தீவினையின் பயனாகவே சுவர்க்கமும் நரகமும் வந்தடைகின்றன என்ற உண்மையைச் சந்திரன் கூறிய பின்னர் அடிகளார் சந்திரனிடம் தொடர்ந்து வினாவியது.

8. "திருந்து கல்வி யெழுமையுமே மாப்புடைத்தென் றுரைத்த செய்மொழியைத் தேர்தி....."

யாரால்: சந்திரனால்.

யாருக்கு: விபுலானந்த அடிகளாருக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: ஒருவர் வருந்தித் தாம் கற்ற கல்வி மறுமையிலும் நிலைத்து நிற்குமா என்று அடிகளார் கேட்ட கேள்விக்குச் சந்திரன் பதிலாகக் கூறியது

9. "வெம்பரிதித் தீயகற்றும் மின்னே நினைத் தொழுதேன்."

யாரால்: விபுலாநந்த அடிகளால்.

யாருக்கு: கங்கை நதிக்கு.

எச்சந்தர்ப்பத்தில். வான்புகுந்த கந்தசாமிப் பெரியோனுக்கு அடிகளார் வரைந்த ஓலையினைச் சேர்ப்பிப்பதற்குத் தகுந்தவர் கங்காநதியேயெனத் துணிந்து அதனைப் புகழ்ந்துரைக்கும் போது கூறியது.

10. 'மாற்றுயர்ந்த பொன்மலைமேல் கவத்த வெள்ளிக் கோல்போல் ஏற்றியல்வோன் பொற்சடையை யெய்தி நின்ற வானதியே

ஏற்றியக்கோன் பொற்சபைவிட் டிங்குவந்து மக்கள்பசி
ஆற்ற வுணவளிக்கு மன்னாய் நினைந் தொழுதேன்.''

யாரால்: விபுலாநந்த அடிகளால்.

யாருக்கு: கங்கைநதிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: கந்தசாமிப் பெரியோனுக்குத் தாம் எழுதிய ஓலையினைக் கொண்டு செல்வதற்குரியாளெனக் கங்கை நதியினைக் கருதிய அடிகளார் அதன் சிறப்பினைப் புகழ்ந் துரைத்த போது கூறியது.

11. ''பூதலத்தோர் தொடர்பிறவி வேர்களையுந் தூயோய் நினைந் தொழுதேன்.''

யாரால்: விபுலாநந்த அடிகளால்.

யாருக்கு: கங்கைநதிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: வானுலகு புகுந்த கந்தசாமிப் பெரியோனுக் குத் தாம் வரைந்த ஓலையினைக் கங்கையில் விடுக்கு முன் அதனைத் தொழுது கூறியது.

12. ''அண்டர் நாட்டிடை வைகும் நண்பன் கையில் ஈங்கிது சேர்க.''

யாரால்: விபுலானந்த அடிகளாரால்.

யாருக்கு: கங்கைநதிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: வானுலகில் வாழும் கந்தசாமிப் பெரியோன் கையில் தாம் எழுதிய ஓலையினைச் சேர்க்குமாறு அடிகளார் அதனைக் கங்கையில் விடுத்த போது கூறியது

## 10. ஒன்றுக்கு ஆயிரம் ஆயிரம்

1. ''மூடு வாயை அற்பப்பிராணியே. சூடு அதிகமென்று தானே நீ இவ்வாறு கத்துகிறாய். ஒரு வறிய குடும் பத்துப் பிராணி என்பதை நீ அறிந்து கொள். இந்தக் காலநிலை மாற்றங்களை நாம் பொறுத்துத்தான் ஆக வேண்டும் உனது வறிய முதிய எஜமானர் எங்கு போய் இருக்கிறாரோ தெரியாது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரால்: கூடாரத்தில் இருந்த கிழவியினால்.

யாருக்கு: கத்திக் கொண்டிருந்த அவளது ஆட்டுக்கு:

எச்சந்தர்ப்பத்தில்: வெப்பமிகுதியால் அவளது ஆடு கத்திய வேளையில் கூறியது

2. "ஐயோ! பாவம். அநாதைகள் அந்த வெப்பத்தில் அவர்கள் ஏன் வீட்டைவிட்டு வந்து கொண்டிருக்கிறார்கள்."

யாரால்: கிழவியால்.

யாருக்கு: தனக்குத்தானே.

எச்சந்தர்ப்பத்தில்: கிழவி கூடாரத்துக்கு வெளியே வந்து பார்த்த போது அதிக தூரத்தில் மூன்று உருவங்கள் அவள் கண்களுக்குத் தென்பட்ட போது கூறியது.

3. "அஸ்ஸலாமு அலைக்கும் பாட்டியாரே."

யாரால்: ஒட்டகைமீது ஏறிவந்த மூவரால்.

யாருக்கு: கிழவிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: கூடாரத்துக்கு வெளியே அவள் பார்த்துக் கொண்டு நின்றபோது.

4. "பாட்டியாரே! எங்களுக்கு ஏதாவது குடிக்கத் தர முடியுமா?

யாரால்: கூடாரத்தில் வந்து தங்கிய மூவரால்.

யாருக்கு: கூடாரத்தில் தங்குவதற்கு அனுமதியளித்த கிழவிக்கு:

எச்சந்தர்ப்பத்தில்: கூடாரத்தின் உள்ளே குளிர்ந்த மணலில் அவர்கள் தங்கியிருந்த போது.

5. "ஆம்! இதோ இருக்கிறதே என்னுடைய ஆடு. பாலைக் கறந்து அதனைக் குடியுங்கள்."

யாரால்: கிழவியினால்.

யாருக்கு: கூடாரத்தில் வந்து தங்கியிருந்த மூவருக்கும்.

எச்சந்தர்ப்பத்தில்: எங்களுக்கு ஏதாவது குடிக்கத் தர முடியுமா? என்று கிழவியிடம் அம்மூவரும் கேட்டபோது அதற்கு அவள் பதிலாகக் கூறியது.

6. "எங்களுக்குச் சாப்பிட இங்கு ஏதாவது இருக்குமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரால்: கூடாரத்தில் வந்து தங்கியிருந்தவர்களில் ஒருவரால்.

யாருக்கு: கிழவிக்கு;

எச்சந்தர்ப்பத்தில்: கிழவியின் அனுமதியுடன் ஆட்டின் பாலைக் கறந்து குடித்த பின்னர்.

7. "ஆம்! இதோ இருக்கிறது ஆடு. அதை அறுத்துத் தூய தாக்கித் தாருங்கள். நான் இறைச்சியைச் சமைத்துத் தருகிறேன்."

யாரால்: கிழவியினால்.

யாருக்கு: கூடாரத்தில் வந்து தங்கியுள்ள மூவருக்கும் (ஹஸன், ஹுஸைன், அப்துல்லா பின் ஜாபர்)

எச்சந்தர்ப்பத்தில்: சாப்பிடுவதற்கு ஏதாவது இருக்கிறதா என்று மூவரும் வினாவியபோது அதற்கு அவள் கூறியது.

8. "உம்மா, நாம் குறைஷிக் குலத்தைச் சேர்ந்தவர்கள். நீங்கள் எங்களைப் பெரிதும் உபசரித்துள்ளீர்கள். நாங்கள் எப்பொழுதும் கடமைப்பட்டுள்ளோம். அடுத்த முறை இவ்வழியாகச் செல்லும் பொழுது உங்களுக்குச் செய்ய வேண்டிய கைம்மாறினைச் செய்வோம்.

யாரால்: கிழவியின் கூடாரத்தில் தங்கியிருந்தோரால் (ஹஸன், ஹுஸைன், அப்துல்லா பின் ஜாபர்)

யாருக்கு: கிழவிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: கூடாரத்தில் தங்கி ஆட்டுப்பால் பருகியும் ஆட்டிறைச்சி உண்டும் களைப்பு நீங்கி அம்மூவரும் மீண்டும் பயணத்தை ஆரம்பித்த போது.

9. "அவர்கள் நல்ல மனிதர்கள். என்னிடமிருந்த ஒரே ஆட்டை அவர்களுக்குக் கொடுத்தேன். எனினும் நான் அதற்கு வருத்தப்படவில்லை.

யாரால்: கிழவியினால்.

யாருக்கு: தனக்குத்தானே.

எச்சந்தர்ப்பத்தில்: தனது கூடாரத்தில் வந்து தங்கிய பயணிகள் மூவரும் சென்று மறையும் வரை பார்த்து நின்றதன் பின்னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. "மனைச்சி, நீ என்ன செய்து விட்டாய்? நமது வாழ்க்கைக்குத் துணையாக இருந்தது அந்த ஆடு தான். நமக்குச் சாப்பிட ஒன்றுமில்லாத இடத்து அதன் பாலைக் குடித்து வாழ்க்கை நடத்தினோம். உனது விருந்தோம்பல் நம்மையே அழித்து விட்டது. இனி நாம் பட்டினிகிடந்து சாக வேண்டியதுதான்.

யாரால்: கிழவியின் கணவனால்.

யாருக்கு: கிழவிக்கு (தனது மனைவிக்கு)

எச்சந்தர்ப்பத்தில்: தனத உடைமையான ஆடு கூடாரத்துக்கு வந்த விருந்தினர்க்கு இரையாகி விட்டதை அறிந்தபோது தன் மனைவியைக் கடிந்து உரைத்தது.

11. "இல்லை பிரபு, கோபங்கொள்ளாதீர்கள்' அவர்கள் நல்லவர்கள். அவர்களைக் குறைகூற முடியாது. நமது வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்த ஆட்டை இழந்து விட்டோம். உண்மைதான். எனக்கொரு யோசனை தோன்றுகிறது. ஏன் நாம் மதீனாவுக்குப் போகக் கூடாது. அங்கே நமக்கு அதிஷ்டம் கிடைக்குமல்லவா? பண்ணைத் தொழிலாளியாக அங்கே உங்களுக்கு ஒரு வேலை கிடைக்கக்கூடுமல்லவா?"

யாரால்: கிழவியால்.

யாருக்கு: கணவனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில் ஆட்டை இழந்த நிலையில் தன்மீது கோபம் கொண்டு பேசிய தன் கணவனைச் சாந்தப்படுத்தும் வகையில் கிழவி கூறியது;

12. "பாட்டி என்னைத் தெரியுமா?"

யாரால்: ஹஸன் (றழி) அவர்களால்.

யாருக்கு: கிழவிக்கு

எச்சந்தர்ப்பத்தில்: மதீனா தெருவீதியில் ஒருநாள் காலை ஹஸனும் அவரது பணியாளரும் சென்று கொண்டிருந்தபோது தம்மை பஃனர் கூடாரத்தில் விருந்தோம்பிய கிழவியை எங்கோ பார்த்தபோது தோன்றிய வேளையில் ஹஸன் வினாவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை ஐயா! எனக்கு ஞாபகமில்லை."

யாரால்: கிழவியால்

யாருக்கு: ஹஸன் பின் அலிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: மதீனா நகர் வீதியில் தன்னைப் பார்த்து 'பாட்டி என்னைத் தெரியுமா!' என்று கேட்டவருக்குப் பதிலாகக் கூறியது.

14. "உங்கள் விருந்தாளிகளுக்காக உங்கள் ஒரேயொரு ஆட்டைத் தியாகம் செய்தது உங்களுக்கு ஞாபகமில்லையா?"

யாரால்: ஹஸன் பின் அலியால்.

யாருக்கு: கிழவிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: மதீனா வீதியில் - தன் ஆட்டை விருந்தாகக் கொடுத்தவர்களில் ஒருவர் என்று அவர் தன்னை அறிமுகப் படுத்திய பின்னர் கூறியது.

15. "ஆம்! ஆம்! இப்பொழுது எனக்குத் தெரிகிறது. அல்லாஹ் உங்களை ஆசிர்வதிப்பானாக."

யாரால்: கிழவியால்

யாருக்கு: ஹஸன் பின் அலிக்கு

எச்சந்தர்ப்பத்தில்: காலை நேரம் - மதீனா வீதியில் - கிழவியின் ஆட்டை விருந்தாக உண்டவர்களில் தாம் ஒருவர் என்று அவர் தன்னை அறிமுகப்படுத்திய பின்னர் கூறியது

16. "அம்மணி! உங்களுக்குப் பிரதி உபகாரம் செய்வதாகப் பொருந்தினோமல்லவா? இதோ ஆயிரம் திர்ஹங்களையும் ஆயிரம் ஆடுகளையும் கைமாறாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

யாரால்: ஹஸன் பின் அலி அவர்களால்.

யாருக்கு: கிழவிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டபின்னர் தாம் அடுத்த முறை இவ்வழியாகச் செல்லும்போது உங்களுக்குச் செய்ய வேண்டிய கைம்மாறினைச் செய்வோம் என்று முன்னர் உரைத்த வாக்குறுதிக்கமையக் கிழவிக்குத் தம் உபகாரத்தை வழங்கியபோது கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. செய்னம்பு நாச்சியார் மான்மியம்.

1\. "வல்லவன் துணையாலே நல்ல நாள் பார்த்து நாங்கள் வருவோம்."

யாரால்: ஆலிமு அவர்களால்.

யாருக்கு: காசிம்பாவாவுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: கணக்கப்பிள்ளை காசிம்பாவாவை வழி மறித்து இசுமான் கண்டுவின் மகளுக்கும் காசிம்பாவாவின் மகனுக்கும் திருமணப் பேச்சுவார்த்தைக்கு வருவோம் என்று ஆலிம் கூறியது.

2\. "மாமா ஆதங்கண்டு சாவல்கமீது, சக்கரிக்காக்கா, உதுமான் தம்பி, உமறு லெவ்வை, உங்க சாச்சா, உசன் பெரியப்பா, வெள்ளைத்தம்பி, வேங்க மரைக்கார் யாவரும் வேணும்."

யாரால்: ஆலிமுவால்.

யாருக்கு: இசுமான் கண்டுவுக்கும் அவர் மனைவிக்கும்.

எச்சந்தர்ப்பத்தில்: காசிம்பாவா வீட்டில் இசுமான் கண்டு சம்பந்தம் பேசுவதை உறவினர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமெனக் கூறிய வேளையில்.

3\. முன்னறிவித்தலாய் முழுதுஞ் சொல்லி
அவர்களிடமும் அறியச் செய்து
சம்மதங் கேட்டுச் சரிக்கண்டு வருவது
சும்மா வாகிலும் நல்லது தானே."

யாரால்: இசுமான் கண்டுவால்.

யாருக்கு: மனைவி மரியம் பீவிக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: தமது மகளின் திருமணப் பேச்சுவார்த்தைக்கு அவர்களது உறவினர்களையும் அழைத்துப் பேசுதல் நல்லதென்று இசுமான் கண்டுவுக்கு ஆலிமு கூறிய பின்னர்.

4\. "சின்னக்கண்டு, சிவத்தமாமி
பொன்னிநாச்சி, போடியார்சாச்சி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தபிள்ளை' முக்காட்டுக்காரி
இவர்களை யழைக்க இளய சிறுக்களை
உடனே அனுப்புவாய்......''

யாரால்: மரியல் பீவியால்.

யாருக்கு: தனது மகளுக்கு.

எச்சந்தர்ப்பதில்: சம்பந்தி வீட்டாருக்குப் பகாராம் செய்தனுப்புதற்கு அயலவரின் உதவியை நாடி அவர்களை அழைத்து வருமாறு கூறியது.

5. ''முன்னே கூறியமுழுப் பேரையுமே
இன்னே ஓடி எங்கும் போகாமல்
அழைத்து வாவென......''

யாரால்: மரியம் பீவியினால்.

யாருக்கு: தன் இளைய மகனுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: தனது தமக்கை கூறியவற்றை தாயிடம் கூறி இளைய மகன் ஒப்புதல் கேட்டபோது கூறப்பட்டது.

6. ''கணக்சப்பிள்ளை காசிம்பாவா
இணக்கமுரைத்ததை இசைத்தாள் மரியம்
எல்லாம் அறிந்த எங்கள் ஆலிமு
நல்லது கூறினால் நாமேன் மறுப்பாள்?''

யாரால்: மரியம் பீவியினால்.

யாருக்கு: அழைத்து வரப்பட்டவர்களுக்கு.

எச்சந்தர்ப்பத்தில்: மரியம் பீவி வீட்டுக்கு வந்த அயலவர் தங்களை அழைத்ததன் காரணத்தையொட்டிப் பேச்சைத் தொடுத்த போது அவர்களுக்குக் கூறப்பட்டது.

7. ''சீரு சிறப்பு செய்வதற்காகப்
பெரிய செப்பொன்று பேச்சுக்கு முன்னே
சம்பந்த வீட்டுக்குச் சாயந் தரமே
அனுப்ப வேண்டும். ஆதலினாலே
அரிசி மரக்கால் அளந் தெடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றிப் புடைத்துக் குருணல் நீக்கி
ஊறப் போட்டபின் உரலி லிடித்து
மாப்பல காரம் மாலைக்கு முந்தியே
சேர்த்திட வேண்டும் சிவத்தமாமி
யாவரும் வருவீர்....."
யாரால்: மரியம் பீவியால்.
யாருக்கு: தான் அழைத்த பெண்களுக்கு
எச்சந்தர்ப்பத்தில்: அயலில் உள்ள பெண்களை அழைத்த காரணத்தை அவர்களுக்கு விபரித்துக் கூறிய வேளையில்.

8. "பாருங்கள் இந்தப் பலகாரங்களை!
நம்ம குடும்பம் நாடேயறியும்
கிள்ளிக் கொடுத்தாலும் கிடாரம் வேண்டும்
பேச்சுச செப்பா? பிச்சைச் செப்பா?"
யாரால்: செய்னம்பு நாச்சியாரால்.
யாருக்கு: தன் கணவன் காசிம்பாவாவுக்கு.
எச்சந்தர்ப்பத்தில்: மரியம் பீவியினால் அனுப்பப்பட்ட செப்பைத் திறந்து பலகாரங்களைப் பார்த்தபோது கூறியது.

9. "விடுங்க நாச்சி வேண்டாமேகுறை
முதல்முதல் வந்தது முணுமுணுக் காதே
இதெல்லாம் பெரிதாய் எடுக்கப் படாது
பாட்டன் பூட்டன் பழகிய பழக்கம்
வீட்டுக்கு வந்ததை விரும்புதல் வேண்டும்
பள்ளிம் மாவிடம் பங்கு வைக்கவிடு
நாலு கலியாணம் நடத்திப் பார்த்தவ!
வேலிக் காலாய் வீட்டி லிருப்பவ
அவக்குத் தெரியும் அடுக்குப் பண்ண."
யாரால்: காசிம்பாவாவால்.
யாருக்கு: செய்னம்பு நாச்சியாருக்கு.
எச்சந்தர்ப்பத்தில்: மரியம் பீவி அனுப்பிய செப்பில் இருந்த பலகாரங்களின் அளவைப் பார்த்து செய்னம்பு நாச்சியார் சீற்றம் கொண்டு கூறிய வேளையில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனையாகின்றன!**

## தமிழ் இலக்கியம்.

- ✲ நளவெண்பா.
- ✲ நாலடியார்.
- ✲ ஆசாரக்கோவை.
- ✲ பெரியபுராணம்.
- ✲ இலங்கை வளம்.
- ✲ சீறாப்புராணம்.
- ✲ கங்கையில் விடுத்த ஓலை
- ✲ செய்னம்பு நாச்சியார் மான்மியம்.

அனைத்திற்கும் பொழிப்புரை, விளக்கவுரை
கொண்ட தொகுப்புநூல்

ஆக்கம்: **புலவர் இளங்கோ.**

## தமிழ் இலக்கணம் வினா - விடை.

க. பொ. த ப. (சா. த) பரீட்சைக்குத்
தோற்றுவோருக்குப் பயன் தரும் அரியநூல்.

ஆக்கம்: இலக்கிய வித்தகர்

த. **துரைசிங்கம்.** *B.A (Hons) Dip. in-Ed.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாகின்றன!

**10ஆம் 11ஆம் ஆண்டுகளில் கற்கும்**
**மாணவர்களுக்குப் பயன் தரும்**
**அரிய நூல்கள்.**

- கடந்தகாலப் பரீட்சை வினாக்களைத் தழுவி ஆக்கப் பெற்றவை.
- பரீட்சையில் அதிசிறப்புச் சித்தி பெறுவதற்கு வழிகாட்டுபவை.

✻ சைவநெறி வினாவிடை.
ஆக்கம்: திரு. த. துரைசிங்கம் B.A (Hons) Dip-in-Ed

✻ தமிழ் இலக்கியம் - சந்தர்ப்பம் கூறல்.
ஆக்கம்: புலவர் இளங்கோ.

✻ சங்கீதம் வினா விடை.
ஆக்கம்: செல்வி அநேகா.

✻ மனைப் பொருளியல் வினா விடை.
ஆக்கம்: செல்வி யசோதா துரைசிங்கம்.

✻ சித்திரம் வினா விடை.
ஆக்கம்: திரு. த. சிவயோகலிங்கம்;

✻ சமையற்கலை.
ஆக்கம்: செல்வி யசோதா துரைசிங்கம்;

✻ மானவீரன் கும்பகருணன்
ஆக்கம்: திரு. நாகேந்தன்.

✻ **MODEL ESSAYS.**
**(Based on New G. C. E (O/L) Past Question Papers)**

அச்சிட்டோர்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63. B. A. தம்பி வீதி
யாழ்ப்பாணம் 16-8-94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org